**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.95/2022**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.9** |
| **Name** | **:** | திரு. வீரமணி |
| **Husband's Name** | **:** | ஜெயபால் |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.11.2023.**

முதல் விசாரணை -

நான் விளை கிராமத்தில் வசிக்கிறேன். ஓட்டுனர் வேலை செய்து வருகிறேன். புருஷோத்தமனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும்.ரமேசும் தெரியும். புருஷோத்தமன் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் மறுநாள் 20.10.2021 அன்று 2.30, 3.00 மணிக்கு நான் வீட்டிற்கு வந்தேன். போலிசார் வெள்ளை வீட்டிடம் இருந்தார்கள். நான் வெள்ளை வீட்டை தாண்டி தான் என் வீட்டிற்கு

போகவேண்டும். போலிசார் வந்துபோனதற்காக சாட்சி கையொப்பம் போட சொன்னார்கள். போட்டேன். 1,2 போட்டேன் ஞாபகம் இல்லை.

பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அவை முறையே அ.சா.ஆ.4 மற்றும் 5. முதல் கையொப்பமாக லோகநாதன் கையொப்பம் போட்டுள்ளார். நான் கையொப்பம் போடும்போதே லோகநாதன் கையொப்பம் போட்டிருந்தார். மேற்படி கையொப்பங்கள் சாட்சிக்காக போடப்பட்டது. எதற்கு என்று எனக்கு தெரியாது.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

நான் என் வீட்டிற்கு செல்லும்போது போலிசார் எங்கு இருந்தார்கள் என்றால் வெள்ளை வீட்டிற்கு அருகில் உள்ள பஜனை கோயில் அருகில் இருந்தார்கள். சாட்சி கையொப்பம் எதற்காக போலிசார் போட சொன்னார்கள் என்றால் வந்து போனதற்காக போட சொன்னார்கள். போட்டேன். கையொப்பம் போட்ட தாளை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. போலிசார் நான் வரும்போது அந்த இடத்தில் சுற்றி பார்த்தார்கள் என்றால் சரி தான். பார்த்த பிறகு எழுதப்பட்டதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

20.10.2021 அன்று 13.00 மணிக்கு போலிசார் சம்பவ இடம் வந்து பார்வையிட்டு என் முன்னிலையிலும் லோகநாதன் முன்னிலையிலும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றாலும், அதற்காக தான் நானும் லோகநாதனும் கையொப்பம் போட்டோம் என்றால் கையொப்பம்

போட்டோம். அதன்பிறகு போலிசார் வெள்ளை வீட்டு மொட்டை மாடியில் எரிந்த நிலையில் இருந்த கோரைப்பாய் தலையணை மற்றும் பெட்ஷிட் ஆகியவற்றில் இருந்து மாதிரிகள் எடுத்து கைப்பற்றியது சம்பந்தமாக என்னிடமும் லோகநாதனிடமும் கையொப்பம் பெற்றார்கள் என்றால் எடுத்தது எல்லாம் எனக்கு தெரியாது. போலிசார் கையொப்பம் கேட்டதால் போட்டேன். எதிரியின் ரமேஷ் என் நண்பர் என்பதால் எதிரியை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

3 மணிக்கு போலிசார் கேட்டுக்கொண்டதற்காக கையொப்பம் போட்டதை தவிர வேறு எதுவும் இந்த வழக்கை பற்றி தெரியாது என்றால் சரி தான். நான் போகும்போதே போலிசார் இருந்ததால் போலிசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரி தான். கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது, யார் எழுதினார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரி தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.